# திருக்காளத்திக்குப் பயணித்த திருமுறை அருளாளர்கள்

## The blessed ones who traveled to Thirukalathi

**சு.விஜயகுமார்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோயமுத்தூர் – 10.

**S. Vijayakumar,** Ph.d Research Scholar, Tamil Department, TSA Arts , Science, Tamil College, Perur, Coimbatore – 641010.

ORCID ID : https://orcid.org/0009-0002-0006-0241

**DOI : 10.5281/zenodo. 10544690**

**Abstract**

The Srikalahasti Temple is located in the Tirupati district in the state of Andhra Pradesh, India. Shiva in his aspect as Vayu is worshipped as Kalahasteeswara. The temple is also regarded as Dakshina Kailasam. According to regional tradition, it is said to be the site where Kannappa was ready to offer both his eyes to cover blood flowing from the linga before Shiva stopped him and granted him moksha. Snakes, elephants, spiders etc. are also worshiped in this place. This article aims to underline the travel experiences of the benefactors who traveled to Kalatthi mentioned in Panniru Thirumurai. panniru thirumurai is the collection of twelve holy scriptures written by Nayanmars. These are the highly respected scriptures of thamiz shaivites.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்வில் தவிர்க்க இயலாத கூறு பயணமாகும். மனித வாழ்க்கை தொடங்கிய நாள்முதல் பயணம் செல்லுதலும் தொடங்கிவிட்டது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஒவ்வொரு மனிதனும் பயணம் செய்ய வேண்டிய சூழல் உருவாகின்றது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்கள் பயண இலக்கியம் என்ற இலக்கியங்கள் மூலம் இதனை நெறிப்படுத்துகின்றது. எனவே, பயண இலக்கியம் என்பது சங்க காலம் தொட்டு இன்றளவும் தோன்றிய இலக்கியங்களிலும் காணப்பட்டு அமைகின்றது.

பஞ்சபூதத் தலங்களுள் காற்றுத் தலமாக விளங்குவது திருக்காளத்தித் தலமாகும். இத்தலத்தில் பாம்பு, யானை, சிலந்தி முதலிய அஃறிணை உயிர்களும்கூட வழிபட்டு முத்தியினைப் பெற்றுள்ளது. அத்தகைய சிறப்பு கொண்ட இத்தலம் நாயன்மார்களால் பாடல்

பெற்ற தலமாகவும் விளங்குகிறது. பன்னிரு திருமுறையில் காளத்திக்குப் பயணித்த அருளாளர்களின் பயணஅனுபவப் பதிவுகளையும் அதனுடன் தொடர்புடைய செய்திகளையும் அடிக்கோடிட்டுக் காட்டும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords:** காளத்தி, தேவார மூவர், சேக்கிழார், தலச்சிறப்பு. Kaaththi, Thevaa muvar, Sekkizhar, Thalasirappu

**முன்னுரை**

சங்க இலக்கிய பாலைத்திணைப் பாடல்களும் ஆற்றுப்படை நூல்களும் பயண இலக்கிய முன்னோடி நூல்களாக அமைகின்றன. ஆற்றுப்படை நூல்களைத் தொடர்ந்து பக்தி இலக்கியத்திலும் பயணம் ஒரு கூறாக அமைந்துள்ளது. பக்தி இலக்கிய காலத்தில் சைவ நாயன்மார்கள் ஒவ்வொரு திருத்தலந்தோறும் சென்று அதன் வழிகளைக்கண்டு வழிபட்டுச் செல்வது மரபாகும். இது பல்வேறு நுட்பமான பயண இலக்கியக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேற்கண்ட முறையில் திருக்காளத்தித் திருத்தலத்திற்கு பயணித்த சைவ அடியார்களின் பயணத்தை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பயண இலக்கியத்தின் நோக்கம்**

தாங்கள் மேற்கொண்ட பயணத்தில் செல்லுதல் முதல் திரும்பி வருவது வரையில் தங்களின் அனுபவங்களை பிறர் உணர்ந்து கொள்ளும்படி எழுதுதல் பயண இலக்கியத்தின் தலையாய நோக்கமாகும். பயணம் மேற்கொண்டவரின் அனுபவங்கள் பிறருக்குப் பாடமாக அமைந்து அவர்களின் சிறந்த எண்ணங்களைப் புரிந்துகொண்டு உணர்ந்து மகிழ்ந்து படிப்போருக்கும் அத்தகையப் பயணங்களை மேற்கொள்ளத் தூண்டுவது இரண்டாவது நோக்கமாகும்.

**பயண இலக்கியத்தின் பயன்**

தன் பயண நினைவுகளைச் சொல்லுதல், எதிர்காலத்தில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு வழிகாட்டியாக விளங்குதல், சமுதாயக் கல்விக்குத் துணைநிற்றல், மற்றவர்களின் வாழ்க்கை முறையை எடுத்துரைத்தல், படிப்பவரின் பொது அறிவை வளர்த்தலும், பிற நாடுகளில் பலவகை முன்னேற்றத்திற்குரிய அடிப்படைக் காரணங்களை விளக்குதல் போன்றவை பயண இலக்கியத்தின் பயன்களாகும்.

**ஞானசம்பந்தரின் திருக்காளத்திப் பயணம்**

ஞானசம்பந்தருக்கு மூன்று வயதில் அம்பிகைக்குக் காட்சிக் கொடுத்துப் பாலோடு ஞானத்தையும் கலந்து ஊட்டினார். அன்றுமுதல் தோடுடைய செவியன் எனப் பாடி அம்மையப்பரைச் சுட்டிக் காட்டியதால் ஞானசம்பந்தன் என அழைக்கப்பட்டார். தந்தையின்

தோளில் அமர்ந்தவாறே சிவதலங்கள் பலவற்றிற்கும் சென்று திருப்பதிகங்கள் பாடிப் பணிந்தார். அவ்வாறு பதிகம் பாடிய பகுதிகளில் திருக்காளத்தியும் ஒன்றாகும். காளத்திநாதராகிய குடுமித் தேவரையும், காளத்தி மலையின் சிறப்புகளையும் பற்றி இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். பதிகங்களில் காளத்தி மலையின் சிறப்பு, வளம், சிவ வடிவங்கள், தொன்மச் செய்திகள் ஆகியன பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள்,

**"சதுரர்மதி பொதிசடையர் சங்கரர்" (திருஞா.தே.பா.எ – 3459) என்றும்,**

**"வேய் அனைய தோள் உமையோர் பாகம்அது/ வாகவிடை ஏறிசடைமேல்"**

(மேலது, பா.எ – 3461) என்ற பாடலடிகள் சிவ வடிவங்களின் தன்மையை எடுத்துரைக்கின்றன. மேலும் திருக்காளத்தி மலையின் இயற்கை வளங்களை,

**"சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்**

**உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்" (திருஞா.தே, பா.எ – 3545)**

என்ற பாடல்வரிகள் மூலம் சந்தனம், அகில், சாதி, தேக்கு, ஆலம், மயிற்பீலி, கோங்கம், கொன்றை, பாதிரி, மூங்கில், மலையில் விழும் முத்து, மாணிக்கம் போன்றவற்றைப் பொன்முகலியாறு உந்தித் தள்ளிக் கொண்டுவந்து கரையில் சேர்க்கிறது என்று எடுத்தியம்புகிறார். ஞானசம்பந்தர் தன் பயணத்தின் மூலம் காளத்திநாதராகிய குடுமித் தேவரையும், காளத்தி மலையின் சிறப்பையும் மற்றும் இயற்கைச் சூழல்கள் பற்றியும், தம் பாடிய திருக்காளத்திப் பதிகத்தில் பாடியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

**திருநாவுக்கரசர் திருக்காளத்திப் பயணம்**

திருநாவுக்கரசர் திருக்காளத்தி இறைவன் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். இப்பதிகத்தில் சிவபெருமானின் சிறப்புகள், இறைவன் எழுந்தருளியுள்ள பிற தலங்கள், புராணச் செய்திகள் ஆகியவை விளக்கமாக எடுத்துக்க் கூறப்பட்டுள்ளன. குடுமித் தேவராகிய இறைவனைத் திருநாவுக்கரசர், "காளத்தி காணப்பட்ட கணநாதன் காண்" (திருநா.தே, பா.எ – 2353) என்றும், "காளத்தியான்" (மேலது, பா.எ -2354) என்றும் பாடியுள்ளார்.

**வைப்புத் தலங்கள்**

குறிப்பிட்ட சில தலங்களை ஒன்றிரண்டு இடங்களில் அமைத்துப் பாடியுள்ளார். அவ்வாறு பாடப்பட்ட தலங்கள் வைப்புத் தலங்கள் என வழங்கப்படுகின்றன. காளத்திப் பதிகத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள பிற தலங்களும் வைத்துப் பாடப்பட்டுள்ளன. அவை காஞ்சி, திருப்பராய்த்துறை, திருப்பழனம், திருப்பைஞ்சீலி, திருவொற்றியூர்,

சோற்றுத்துறை, கும்பகோணம், கீழ்க்கோட்டம், திருமறைக்காடு, திருவண்ணாமலை ஆகிய தலங்கள் வைப்புத் தலங்களாகக் கூறப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக,

**"வியன்கச்சிக் கம்பன் காண்" (திருநா.தே, பா.எ – 2353), "பராய்த்துறையான் பழனம்பைஞ் சீலியான்காண்" (மேலது, பா.எ – 2354)** எனவரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

**சுந்தரர் திருக்காளத்திப் பயணம்**

சுந்தரர் திருவல்லத்திலிருந்துப் புறப்பட்டு வழிதோறும் உள்ள திருத்தலங்களைத் தரிசித்துப் போற்றியவாறே திருக்காளத்தி மலையினை வந்தடைகின்றார். கண்ணப்பநாயனார் பேரருள் பெற்றுள்ள அப்பரம புண்ணிய மலையினை தரிசித்த கணத்திலேயே நிலத்தில் உடல்தோய வீழ்ந்துப் பணிகின்றார். பின்னர் திருவருள் கூடிவர மலைமீது ஏறிச்சென்று காளத்தியுறைப் பரம்பொருளை தரிசித்துப் பணிந்து போற்றிப் பரவுகின்றார் என்பதை,

**"செண்டாடும் விடையாய் சிவனே என் செழுஞ்சுடரே**
**வண்டாரும் குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே**
**கண்டார் காதலிக்கும் கணநாதன் எம் காளத்தியாய்**
**அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே" (சுந்.தே, பா.எ – 259)**

எனவரும் பாடலின் மூலம் உணரலாம்.

**நக்கீரர் பாடலில் திருக்காளத்திப் பயணம்**

ஒருமுறை நக்கீரர் கயிலாயம் செல்ல முடிவு செய்தார். அவரால் அங்கு செல்ல இயலவில்லை. மிகப்பெரிய ஞானியாகிய அவருக்கு காளத்திக் கோயில் கயிலையாகத் தெரிந்தது. அதனால் நக்கீரர் சென்று அங்குச் சென்று வழிபட காளத்தியப்பர் கயிலை நாதராகக் காட்சியளித்தார். தான் பெற்ற அனுபவத்தை கயிலை பாதி காளத்தி பாதி என்று எழுதினார். இந்தத் தொகுப்பில் கயிலைப் பற்றி ஒரு பாடலிலும், காளத்தி பற்றி அடுத்த பாடலும் என மாறி மாறி வெண்பாக்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இதற்குச் சான்றாக,

**"மாறிப் பிறந்து வழியிடை ஆற்றிடை**
**ஏறி இழியும் இதுவல்லால் – தேறித்**
**திருக்கயிலை ஏந்திரேல் சேமத்தால் யார்க்கும்**

**இருக்கயிலை கண்டீர் இனிது ” (கயி.காள.அந், பா.எ – 25)** எனவரும் வெண்பாக்களில் கயிலை மற்றும் காளத்தியை வணங்குவார்களுக்கு இறைவன் முத்திப் பேற்றினை நல்குவார் என்பதைச் சுட்டிகாட்டுகிறார்.

**சேக்கிழார் திருக்காளத்திப் பயணம்**

கண்ணப்ப நாயனார் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டு காளத்தி மலைச்சாரலை அடைந்து தவப்பயனால் இறைவனைக் கண்டு பத்திமை கொள்கிறார். திருக்காளத்தி மலையில் எழுந்தருளிய இறைவன் திருப்பெயர் குடுமித்தேவர் என்பதாகும். சடை முடித்த பெருமாள் எனும் பொருளை இப்பெயர் குறிக்கிறது. காளத்தி மலையின் மீது இறைவன் எழுந்தருளியிருப்பதை,

**“… …… …………… ………… ……………**

**காணநீ போதின் நல்ல காட்சியே காணும் இந்தச்**

**சேணுயர் திருக்காளத்தி மலைமிசை எழுந்து செல்வே**

**கோணமில் குடுமித் தேவர் இருப்பர்” (பெ.பு.கா, பா.எ – 96)** எனும் பாடலடிகளில் சேக்கிழார் பெருமான் பாடுகிறார். மேலும், இத்தலத்து இறைவனை ஏகநாயகர், திங்கள் சேர்சடையார், தேவர், விமலனார், தம்பிரானார், மலைமருந்து, காளத்தியப்பர், திருக்காளத்தி அடிகளார், வள்ளலார், காளத்தியார் எனும் பெயர்களால் சேக்கிழார் பெருமான் போற்றுகிறார். இத்தலத்தில் இறைவனைக் காணும்போது முற்பிறப்பின் வினைச் சார்புகள் நீங்கும் என்பதைச் சேக்கிழார்,

**“திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணாமுன்னே**

**அங்கண் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் எய்தத்**

**தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கி……..” (மேலது, பா.எ – 104)**

எனப் பாடுகிறார்.

**முடிவுரை**

திருமுறை அருளாளர்கள் பயணங்கள் எனும் இக்கட்டுரையில், ஞானசம்பந்தர் உமையம்மையின் ஞானப்பால் பெற்று, தனது தந்தையின் தோளில் அமர்ந்து பயணித்த செய்தியை திருக்கடைக்காப்பு பதிகத்திலும், திருநாவுக்கரசர் சிவாலயங்கள் தோறும் பயணித்த செய்தியை தேவாரத்திலும், சுந்தரர் பயணம் சென்ற செய்தியை திருப்பாட்டு பதிகத்திலும், நக்கீரர் காளத்திநாதரை வழிபட்ட செய்தியை பதினொறாம் திருமுறை எனும் பிரபந்த மாலை பதிகத்திலும், சேக்கிழார் அமைச்சராக இருந்தபோது ஒவ்வொரு அடியார்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று பயணித்த

செய்தியை இவரது திருமுறைப் பாடல்களில் காணப்படுகிறது. அந்த வகையில் காளத்திநாதரை வழிபட்டவராக சேக்கிழார் பயணித்த செய்தியை அறியமுடிகிறது,

**மேற்கோள் நூல்கள்**


1. சிவஞானம். வீ (உரை), (2015), சுந்தரர் தேவாரம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.
2. சிவஞானம். வீ (உரை), (2016), திருஞானசம்பந்தர் தேவாரம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.
3. சிவஞானம். வீ (உரை), (2015), திருநாவுக்கரசர் தேவாரம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.
4. ஞானபுஷ்பம், இரா., (1990), தமிழில் பயண இலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.


**References**


1. Gnanapushpam, R.(1990), Tamilil Payana Ilakkiyam, Ainthinai Pathippagam, Chennai.
2. Sivagnanam (c), (2015), Suntharar Thevaram, Vijaya pathippagam, Coimbatore.
3. Sivagnanam(c), (2016), Thirugnanasambanthar Thevaram, Vijaya pathippagam, Coimbatore.
4. Sivagnanam(c), (2015), Thirunaavukkarasar Thevaram, Vijaya pathippagam, Coimbatore.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**விஜயகுமார். சு, “ திருக்காளத்திக்குப் பயணித்த திருமுறை அருளாளர்கள்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 1, சனவரி 2024, பக். 49-54


**Cite this Article in English**


**Vijayakumar. S, “ The blessed ones who traveled to Thirukalathi”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 1, January 2024, pp. 49-54